## பூதத்தாழ்வார் அருளிச் செய்த
# இரண்டாம் திருவந்தாதி

## இரண்டாம் திருவந்தாதி தனியன்
## (திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச் செய்தது)

என் பிறவி தீர இறைஞ்சினேன் இன்னமுதா *
அன்பே தகளி அளித்தானை * - நன்புகழ் சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் * கடல் மல்லைப்
பூதத்தார் பொன்னங்கழல்

## பூதத்தாழ்வார் அருளிச் செய்த
# இரண்டாம் திருவந்தாதி

2182 * அன்பே தகளியா * ஆர்வமே நெய்யாக *
இன்புருகு சிந்தை இடுதிரியா ** - நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் * நாரணற்கு *
ஞானத் தமிழ் புரிந்த நான் 1

2183 ஞானத்தால் நன்குணர்ந்து * நாரணன் தன் நாமங்கள் *
தானத்தால் மற்றவன் பேர் சாற்றினால் ** - வானத்து
அணியமரர் * ஆக்குவிக்கும் அஃதன்றே * நங்கள்
பணியமரர் கோமான் பரிசு 2

2184 பரிசு நறுமலரால் * பாற்கடலான் பாதம் *
புரிவார் புகப்பெறுவர் போலாம் ** - புரிவார்கள்
தொல்லமரர் கேள்வித் * துலங்கொளி சேர் தோற்றத்து *
நல்லமரர் கோமான் நகர் 3

2185 நகரிழைத்து நித்திலத்து * நாண்மலர் கொண்டு * ஆங்கே
திகழு மணிவயிரம் சேர்த்து ** - நிகரில்லாப்
பைங்கமலம் ஏந்திப் * பணிந்தேன் பனிமலராள் *
அங்கம் வலம் கொண்டான் அடி 4

2186 அடி மூன்றில் இவ்வுலகம் * அன்று அளந்தாய் போலும் *
அடி மூன்று இரந்து அவனி கொண்டாய் ** - படி நின்ற
நீரோத மேனி * நெடுமாலே! * நின் அடியை
யாரோத வல்லார் அறிந்து? 5

2187 அறிந்து ஐந்தும் உள்ளடக்கி * ஆய்மலர் கொண்டு * ஆர்வம்

செறிந்த மனத்தராய்ச் செவ்வே ** - அறிந்து அவன் தன்
பேரோதி ஏத்தும் * பெருந்தவத்தோர் காண்பரே *
காரோத வண்ணன் கழல் 6

2188 கழல் எடுத்து வாய் மடித்துக் * கண் சுழன்று[1] * மாற்றார்
அழல் எடுத்த சிந்தையராய் அஞ்ச ** - தழல் எடுத்த
போராழி ஏந்தினான் * பொன்மலர்ச் சேவடியை[2] *
ஓராழி நெஞ்சே! உகந்து 7

2189 உகந்து உன்னை வாங்கி * ஒளி நிறங்கொள் கொங்கை *
அகம் குளிர உண்ணென்றாளாவி ** - உகந்து
முலை உண்பாய் போலே * முனிந்துண்டாய் * நீயும்
அலை பண்பால்[3] ஆனமையால் அன்று 8

2190 அன்று அது கண்டு அஞ்சாத * ஆய்ச்சி உனக்கு இரங்கி *
நின்று முலை தந்த இந்நீர்மைக்கு ** - அன்று
வரன் முறையால் நீ அளந்த * மாகடல் சூழ் ஞாலம் *
பெருமுறையால் எய்துமோ பேர்த்து? 9

2191 பேர்த்தனை * மாசகடம் பிள்ளையாய் * மண் இரந்து
காத்தனை * பல்லுயிரும் காவலனே! ** - ஏத்திய
நாவுடையேன் பூவுடையேன் * நின்னுள்ளி நின்றமையால் *
காவடியேன் பட்ட கடை 10

2192 கடை நின்று அமரர் கழல் தொழுது ** நாளும்
இடை நின்ற * இன்பத்தராவர் ** - புடை நின்ற
நீரோத மேனி * நெடுமாலே! * நின் அடியை
யாரோத வல்லார் அவர்? 11

2193 அவர் இவர் என்றில்லை * அரவணையான் பாதம் *
எவர் வணங்கி ஏத்தாதார் எண்ணில் ** - பவரும்
செழுங்கதிரோன் ஒண்மலரோன் * கண்ணுதலோன் அன்றே? *
தொழுந்தகையார் நாளும் தொடர்ந்து 12

2194 தொடரெடுத்த மால் யானை * சூழ்கயம் புக்கஞ்சி *
படரெடுத்த பைங்கமலம் கொண்டு ** - அன்று இடரடுக்க
ஆழியான் * பாதம் பணிந்தன்றே? * வானவர் கோன்
பாழி தான் எய்திற்றுப் பண்டு 13

[1] சுழன்ற
[2] சேவடியே
[3] பண்பாய்

2195 பண்டு இப்பெரும் பதியை ஆக்கி * பழி பாவம்
கொண்டு * இங்கு வாழ்வாரைக் கூறாதே ** - எண்திசையும்
பேர்த்த கரம் நான்குடையான் * பேரோதிப் பேதைகாள்! *
தீர்த்தகரராமின் திரிந்து 14

2196 திரிந்தது வெஞ்சமத்துத் * தேர் கடவி * அன்று
பிரிந்தது * சீதையை மான் பின் போய் ** - புரிந்ததுவும்
கண் பள்ளி கொள்ள * அழகியதே! * நாகத்தின்
தண் பள்ளி கொள்வான் தனக்கு 15

2197 தனக்கடிமை பட்டது * தான் அறியானேலும் *
மனத்தடைய வைப்பதாம் மாலை ** - வனத்திடரை
ஏரியாம் வண்ணம் * இயற்றும் இதுவல்லால் *
மாரியார் பெய்கிற்பார் மற்று? 16

2198 மற்றார் இயலாவர்? * வானவர் கோன் மாமலரோன் *
சுற்றும் வணங்கும் தொழிலானை ** - ஒற்றைப்
பிறை இருந்த * செஞ்சடையான் பின் சென்று * மாலைக்
குறை இரந்து தான் முடித்தான் கொண்டு 17

2199 கொண்டது உலகம் * குறள் உருவாய்க் கோள் அரியாய் *
ஒண்திறலோன் மார்வத்து உகிர் வைத்தது ** - உண்டதுவும்
தான் கடந்த ஏழுலகே * தாமரைக்கண் மால் ஒரு நாள் *
வான் கடந்தான் செய்த வழக்கு 18

2200 வழக்கன்று கண்டாய் * வலி சகடம் செற்றாய் *
வழக்கென்று நீ மதிக்க வேண்டா ** - குழக்கன்று
தீவிளவின் காய்க்கெறிந்த * தீமை திருமாலே! *
பார் விளங்கச் செய்தாய் பழி 19

2201 பழி பாவம் கையகற்றிப் * பல்காலும் நின்னை *
வழி வாழ்வார் வாழ்வராம் மாதோ ** - வழுவின்றி
நாரணன் தன் நாமங்கள் * நன்குணர்ந்து நன்கேத்தும் *
காரணங்கள்[4] தாமுடையார் தாம் 20

2202 தாம் உளரே * தம் உள்ளம் உள்ளுளதே * தாமரையின்
பூவுளதே * ஏத்தும் பொழுதுண்டே ** - வாமன்
திருமருவு * தாள் மருவு சென்னியரே * செவ்வே
அருநரகம் சேர்வதரிது 21

2203 அரியது எளிதாகும் * ஆற்றலால் மாற்றி *

[4] தாரணங்கள்

பெருக முயல்வாரைப் பெற்றால் ** - கரியதோர்
வெண்கோட்டு மால் யானை * வென்றி[5] முடித்தன்றே *
தண்கோட்டு[6] மாமலரால் தாழ்ந்து 22

2204 தாழ்ந்து வரம் கொண்டு * தக்க வகைகளால் *
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும் ** - தாழ்ந்த
விளங்கனிக்குக் * கன்று எறிந்து வேற்றுருவாய் * ஞாலம்
அளந்து அடிக்கீழ்க் கொண்ட அவன் 23

2205 அவன் கண்டாய் நன்னெஞ்சே! * ஆரருளும் கேடும் *
அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான் ** - அவன் கண்டாய்
காற்றுத் தீ நீர் வான் * கருவரை மண் காரோத *
சீற்றத் தீயாவானும் சென்று 24

2206 சென்றது இலங்கை மேல் * செவ்வே தன் சீற்றத்தால் *
கொன்றது இராவணனைக் கூறுங்கால் ** - நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் * வேங்கடமே * விண்ணவர் தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து 25

2207 வந்தித்தவனை * வழி நின்ற ஐம்பூதம் *
ஐந்தும் அகத்தடக்கி ஆர்வமாய் ** - உந்திப்
படியமரர் வேலையான் * பண்டு அமரர்க்கு ஈந்த *
படியமரர் வாழும் பதி 26

2208 பதியமைந்து நாடிப் * பருத்தெழுந்த சிந்தை *
மதியுரிஞ்சி வான்முகடு நோக்கி ** - கதி[7] மிகுத்து அம்
கோல் தேடி ஓடும் * கொழுந்ததே போன்றதே *
மால் தேடி ஓடும் மனம் 27

2209 மனத்துள்ளான் வேங்கடத்தான் * மாகடலான் * மற்றும்
நினைப்பரிய * நீள் அரங்கத்து உள்ளான் ** - எனைப்பலரும்
தேவாதி தேவன் * எனப்படுவான் * முன்னொரு நாள்
மாவாய் பிளந்த மகன் 28

2210 மகனாகக் கொண்டெடுத்தாள் * மாண் பாய கொங்கை *
அகனார உண்பன் என்றுண்டு ** - மகனைத் தாய்
தேறாத வண்ணம் * திருத்தினாய் * தென் இலங்கை
நீறாக எய்தழித்தாய்! நீ 29

[5] வென்று
[6] தண்தோட்டு
[7] கதிர்

2211 நீ அன்று உலகளந்தாய் * நீண்ட திருமாலே! *
நீ அன்று உலகிடந்தாய் என்பரால் ** - நீ அன்று
காரோதம் முன் கடைந்து * பின் அடைத்தாய் மாகடலை *
பேரோத மேனிப் பிரான்! 30

2212 பிரான் என்று நாளும் * பெரும்புலரி என்றும் *
குரானல் செழும்போது கொண்டு ** - வராகத்து
அணி உருவன் * பாதம் பணியும் அவர் கண்டீர் *
மணி உருவம் காண்பார் மகிழ்ந்து 31

2213 மகிழ்ந்தது சிந்தை * திருமாலே! * மற்றும்
மகிழ்ந்தது * உன் பாதமே போற்றி ** - மகிழ்ந்த
அழல் ஆழி சங்கம் * அவை பாடி ஆடும் *
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து 32

2214 துணிந்தது சிந்தை * துழாய் அலங்கல் * அங்கம்
அணிந்தவன் பேர் * உள்ளத்துப் பல்கால் ** - பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் * விறல் வேங்கடவனையே *
வாய்திறங்கள் சொல்லும் வகை 33

2215 வகையால் அவனி * இரந்தளந்தாய் பாதம் *
புகையால் நறுமலரால் முன்னே ** - மிக வாய்ந்த
அன்பாக்கி ஏத்தி * அடிமைப்பட்டேன் உனக்கு *
என் பாக்கியத்தால் இனி 34

2216 இனிதென்பர் காமம் * அதனிலும் ஆற்ற *
இனிதென்பர் தண்ணீரும் எந்தாய்! ** - இனிதென்று
காமநீர் வேளாது * நின் பெருமை வேட்பரேல் *
சேமநீராகும் சிறிது 35

2217 சிறியார் பெருமை * சிறிதின் கண் எய்தும் *
அறியாரும் தாமறியார் ஆவர் ** - அறியாமை
மண் கொண்டு மண் உண்டு * மண் உமிழ்ந்த மாயன் என்று *
எண் கொண்டு என் நெஞ்சே! இரு 36

2218 இருந்தண் கமலத்து * இருமலரின் உள்ளே *
திருந்து திசைமுகனைத் தந்தாய்! ** - பொருந்திய நின்
பாதங்கள் ஏத்திப் * பணியாவேல் * பல் பிறப்பும்
ஏதங்கள் எல்லாம் எமக்கு 37

2219 எமக்கென்று இருநிதியம் * ஏமாந்திராதே *

தமக்கென்றும் சார்வம் அறிந்து[8] ** - நமக்கென்றும்
மாதவனே என்னும் * மனம் படைத்து * மற்றவன் பேர்
ஓதுவதே நாவினால் ஓத்து 38

2220 ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே * உத்தமன் பேர்
ஏத்தும் * திறம் அறிமின் ஏழைகாள்! ** - ஓத்ததனை
வல்லீரேல் * நன்று அதனை மாட்டீரேல் * மாதவன் பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு 39

2221 சுருக்காக வாங்கிச் * சுலாவி நின்று * ஐயார்
நெருக்கா முன் * நீர் நினைமின் கண்டீர் ** - திருப்பொலிந்த
ஆகத்தான் * பாதம் அறிந்தும் அறியாத *
போகத்தால் இல்லை பொருள் 40

2222 பொருளால் அமருலகம் * புக்கியலல் ஆகாது *
அருளால்[9] அறம் அருளும் அன்றே? ** - அருளாலே
மாமறையோர்க்கு ஈந்த * மணிவண்ணன் பாதமே *
நீ மறவேல் நெஞ்சே! நினை 41

2223 நினைப்பன் திருமாலை * நீண்ட தோள் காண *
நினைப்பார் பிறப்பொன்றும்[10] நேரார் ** - மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும் * பேரின்பம் எல்லாம் *
துறந்தார் தொழுதாரத் தோள் 42

2224 தோள் இரண்டெட்டேழும் * மூன்றும் முடி அனைத்தும் *
தாள் இரண்டும் வீழச் * சரம் துரந்தான் ** - தாள் இரண்டும்
ஆர் தொழுவார் பாதம் * அவை தொழுவதன்றே? * என்
சீர்கெழு தோள் செய்யும் சிறப்பு 43

2225 சிறந்தார்க்கு எழுதுணையாம் * செங்கண்மால் நாமம் *
மறந்தாரை மானிடமா வையேன் ** - அறம் தாங்கும்
மாதவனே! என்னும் * மனம் படைத்து * மற்றவன் பேர்
ஓதுவதே நாவினால் உள்ளு 44

2226 உளதென்று இறுமாவார் * உண்டில்லை என்று *
தளர்தல் அதன் அருகும் சாரார் ** - அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் * விண்ணோர் முடி தோயும் *
பாதத்தான் பாதம் பயின்று 45

---

[8] சார்வு என்றறிந்து
[9] அருளான்/அருளாள்
[10] பிறப்பென்றும்

2227 பயின்றது அரங்கம் திருக்கோட்டி * பன்னாள்
பயின்றதுவும் * வேங்கடமே பன்னாள் ** - பயின்றது
அணிதிகழும் சோலை * அணிநீர்மலையே *
மணி திகழும் வண்தடக்கை மால் 46

2228 மாலை அரி உருவன் * பாத மலர் அணிந்து *
காலை தொழுதெழுமின் கைகோலி ** - ஞாலம்
அளந்து இடந்து உண்டு உமிழ்ந்த * அண்ணலை மற்றல்லால்[11] *
உளங்கிடந்த ஆற்றால் உணர்ந்து 47

2229 உணர்ந்தாய் மறை நான்கும் * ஓதினாய் நீதி *
மணந்தாய் மலர்மகள் தோள் மாலே! ** - மணந்தாய் போய்
வேயிருஞ்சாரல் * வியலிரு ஞாலம் சூழ் *
மாயிருஞ்சோலை மலை 48

2230 மலை ஏழும் * மாநிலங்கள் ஏழும் அதிர *
குலை சூழ் குரை கடல்கள் ஏழும் ** - முலை சூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை * நவின்றுண்ட நாவன் என்று *
அஞ்சாது என் நெஞ்சே! அழை 49

2231 அழைப்பன் திருமாலை * ஆங்கு அவர்கள் சொன்ன *
பிழைப்பில் பெரும் பெயரே பேசி ** - இழைப்பரிய
ஆயவனே! யாதவனே! * என்றவனை யார் முகப்பும் *
மாயவனே! என்று மதித்து 50

2232 மதிக்கண்டாய் நெஞ்சே! * மணிவண்ணன் பாதம் *
மதிக்கண்டாய் மற்றவன் பேர் தன்னை ** - மதிக்கண்டாய்
பேராழி நின்று * பெயர்ந்து கடல் கடைந்த
நீராழி வண்ணன் நிறம் 51

2233 நிறம் கரியன் * செய்ய நெடுமலராள் மார்வன் *
அறம் பெரியன் ஆரது அறிவார்? ** - மறம் புரிந்த
வாளரக்கன் போல்வானை * வானவர் கோன் தானத்து *
நீள் இருக்கைக்கு உய்த்தான் நெறி 52

2234 நெறியார் குழற்கற்றை * முன் நின்று பின் தாழ்ந்து *
அறியாது இளங்கிரி என்றெண்ணி ** - பிறியாது
பூங்கொடிக்கள் வைகும் * பொருபுனல் குன்று என்றும் *
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு 53

2235 வெற்பென்று இருஞ்சோலை * வேங்கடம் என்று இவ்விரண்டும் *

[11] மற்றெல்லாம்

நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் ** - நிற்பென்று
உளங்கோயில் * உள்ளம் வைத்து உள்ளினேன் * வெள்ளத்து
இளங்கோயில் கைவிடேல் என்று 54

2236 என்றும் மறந்தறியேன் * ஏழ்பிறப்பும் எப்பொழுதும் *
நின்று நினைப்பொழியா நீர்மையால் ** - வென்றி
அடலாழி கொண்ட * அறிவனே! * இன்பக்
கடலாழி நீ அருளிக் காண் 55

2237 காணக் கழிகாதல் * கைமிக்குக் காட்டினால் *
நாணப்படும் என்றால் நாணுமே? ** - பேணிக்
கருமாலைப் * பொன்மேனி காட்டா முன் காட்டும் *
திருமாலை நங்கள் திரு 56

2238 திருமங்கை நின்றருளும் * தெய்வம் நா வாழ்த்தும் *
கருமம் கடைப்பிடிமின் கண்டீர் ** - உரிமையால்
ஏத்தினோம் பாதம் * இருந்தடக்கை எந்தை பேர் *
நால் திசையும் கேட்டீரே? நாம் 57

2239 நாம் பெற்ற நன்மையும் * நாமங்கை நன்னெஞ்சத்து *
ஓம்பி இருந்து எம்மை ஓதுவித்து ** - வேம்பின்
பொருள் நீர்மை ஆயினும் * பொன்னாழி பாடென்று *
அருள் நீர்மை தந்த அருள் 58

2240 அருள் புரிந்த சிந்தை * அடியார் மேல் வைத்து *
பொருள் தெரிந்து காண்குற்ற அப்போது ** - இருள் திரிந்து[12]
நோக்கினேன் நோக்கி * நினைந்தேனதொண்கமலம் *
ஓக்கினேன் என்னையும் அங்கு ஓர்ந்து 59

2241 ஓர் உருவன் அல்லை * ஒளி உருவம் நின் உருவம் *
ஈருருவன் என்பர் இருநிலத்தோர் ** - ஓர் உருவம்
ஆதியாம் வண்ணம் * அறிந்தார் அவர் கண்டீர் *
நீதியால் மண் காப்பார் நின்று 60

2242 நின்றதோர் பாதம் * நிலம் புதைப்ப * நீண்ட தோள்
சென்று அளந்தது என்பர் திசை எல்லாம் ** - அன்று
கருமாணியாய் * இரந்த கள்வனே! * உன்னைப்
பிரமாணித்தார் பெற்ற பேறு! 61

2243 பேறொன்று முன்னறியேன் * பெற்றறியேன் பேதைமையால் *
மாறென்று சொல்லி வணங்கினேன் ** - ஏறின்

[12] இரிந்து

பெருத்தெருத்தம் கோடொசியப் * பெண்ணசையின் பின் போய் *
எருத்திறுத்த நல்லாயர் ஏறு 62

2244 ஏறேழும் * வென்று அடர்த்த எந்தை * எரி உருவத்து
ஏறேறி * பட்ட விடு சாபம் ** - பாறேறி
உண்ட தலை வாய் நிறையக் * கோட்டங்கை ஒண் குருதி *
கண்ட பொருள் சொல்லின் கதை 63

2245 கதையும்[13] பெரும் பொருளும் கண்ணா! * நின் பேரே
இதயம் * இருந்தவையே ஏத்தில் ** - கதையும்
திருமொழியாய் நின்ற * திருமாலே! * உன்னைப்
பருமொழியால் காணப் பணி 64

2246 பணிந்தேன் திருமேனி * பைங்கமலம் கையால் *
அணிந்தேன் உன் சேவடி மேல் அன்பாய் ** - துணிந்தேன்
புரிந்தேத்தி * உன்னைப் புகலிடம் பார்த்து * ஆங்கே
இருந்தேத்தி வாழும் இது 65

2247 இது கண்டாய் நன்னெஞ்சே! * இப்பிறவி ஆவது *
இது கண்டாய் எல்லாம் நாம் உற்றது ** - இது கண்டாய்
நாரணன் பேர் ஓதி * நரகத்து அருகணையா *
காரணமும் வல்லையேல் காண் 66

2248 கண்டேன் திருமேனி * யான் கனவில் * ஆங்கவன் கைக்
கண்டேன் * கனலும் சுடராழி ** - கண்டேன்
உறு நோய் வினை இரண்டும் * ஓட்டுவித்து * பின்னும்
மறு நோய் செறுவான் வலி 67

2249 வலி மிக்க வாள் எயிற்று * வாள் அவுணர் மாள *
வலி மிக்க வாள் வரை மத்தாக ** - வலி மிக்க
வாள் நாகம் சுற்றி * மறுகக் கடல் கடைந்தான் *
கோள் நாகம் கொம்பொசித்த கோ 68

2250 கோவாகி * மாநிலம் காத்து * நங்கண் முகப்பே
மாவேகிச் செல்கின்ற மன்னவரும் ** - பூ மேவும்[14]
செங்கமல நாபியான் * சேவடிக்கே ஏழ் பிறப்பும் *
தண்கமலமேய்ந்தார் தமர் 69

2251 தமர் உள்ளம் தஞ்சை * தலை அரங்கம் தண்கால் *
தமர் உள்ளும் தண்பொருப்பு வேலை ** - தமர் உள்ளும்

[13] கதையின்
[14] வேரும்

மாமல்லை கோவல் * மதிள் குடந்தை என்பரே *
ஏவல்ல எந்தைக்கு இடம் 70

2252 இடங்கை வலம்புரி நின்று ஆர்ப்ப * எரிகான்று
அடங்கார் * ஒடுங்குவித்தது ஆழி ** - விடங்காலும்
தீ வாய் அரவணை மேல் * தோன்றல் திசை அளப்பான் *
பூவார் அடி நிமிர்த்த போது 71

2253 போதறிந்து வானரங்கள் * பூஞ்சுனை புக்கு * ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டு ஏத்தும் போது ** உள்ளம்! - போது
மணி வேங்கடவன் * மலர் அடிக்கே செல்ல *
அணி வேங்கடவன் பேராய்ந்து 72

2254 ஆய்ந்துரைப்பன் ஆயிரம் பேர் * ஆதிநடு வந்திவாய் *
வாய்ந்த மலர் தூவி வைகலும் ** - ஏய்ந்த
பிறைக் கோட்டுச் * செங்கண் கரி விடுத்த பெம்மான் *
இறைக்கு ஆட்படத் துணிந்த யான் 73

2255 யானே தவம் செய்தேன் * ஏழ் பிறப்பும் எப்பொழுதும் *
யானே தவம் உடையேன் எம்பெருமான்! ** - யானே
இருந்ததமிழ் நன்மாலை * இணை அடிக்கே சொன்னேன் *
பெருந்தமிழன் நல்லேன் பெரிது 74

2256 பெருகு மத வேழம் * மாப்பிடிக்கி முன் நின்று *
இருகண் இளமூங்கில் வாங்கி ** - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் * திருவேங்கடம் கண்டீர் *
வான் கலந்த வண்ணன் வரை 75

2257 வரைச் சந்தனக் குழம்பும் * வான்கலனும் பட்டும் *
விரைப் பொலிந்த வெண்மல்லிகையும் - நிரைத்துக் கொண்டு **
ஆதிக்கண் நின்ற * அறிவன் அடி இணையே *
ஓதிப் பணிவதுறும் 76

2258 உறுங்கண்டாய் நன்னெஞ்சே! * உத்தமன் நற்பாதம் *
உறுங்கண்டாய் ஒண்கமலம் தன்னால் ** - உறுங்கண்டாய்
ஏத்திப் பணிந்தவன் பேர் * ஈரைஞ்ஞூறு எப்பொழுதும் *
சார்த்தி[15] உரைத்தல் தவம் 77

2259 தவம் செய்து * நான்முகனே பெற்றான் * தரணி
நிவந்தளப்ப * நீட்டிய பொற்பாதம் ** - சிவந்த தன்
கை அனைத்தும் * ஆரக் கழுவினான் * கங்கை நீர்

---

[15] சாற்றி

பெய்தனைத்துப் பேர் மொழிந்து பின் 78

2260 பின் நின்று * தாயிரப்பக் கேளான் * பெரும் பணைத்தோள்
முன் நின்று * தானிரப்பாள் மொய்ம்மலராள் ** - சொல் நின்ற
தோள் நலந்தான் * நேரில்லாத் தோன்றல் * அவன் அளந்த
நீள்நிலந்தான் அத்தனைக்கும் நேர் 79

2261 நேர்ந்தேன் அடிமை * நினைந்தேனதொண்கமலம் *
ஆர்ந்தேன் உன் சேவடி மேல் அன்பாய் ** - ஆர்ந்த
அடிக்கோலம் * கண்டவர்க்கு என் கொலோ? * முன்னைப்
படிக்கோலம் கண்ட பகல் 80

2262 பகல் கண்டேன் * நாரணனைக் கண்டேன் * கனவில்
மிகக் கண்டேன் * மீண்டு அவனை மெய்யே - மிகக் கண்டேன் **
ஊன் திகழும் நேமி * ஒளி திகழும் சேவடியான் *
வான் திகழும் சோதி வடிவு 81

2263 வடிக்கோல வாள் நெடுங்கண் * மாமலராள் * செவ்விப்
படிக்கோலம் கண்டு அகலாள் பல்நாள் ** - அடிக்கோலி
ஞாலத்தாள் * பின்னும் நலம் புரிந்தது என் கொலோ? *
கோலத்தால் இல்லை குறை 82

2264 குறையாக வெஞ்சொற்கள் * கூறினேன் கூறி *
மறையாங்கு என உரைத்த மாலை ** - இறையேனும்
ஈயுங்கொல்! என்றே * இருந்தேன் எனைப்பகலும் *
மாயன் கண் சென்ற வரம் 83

2265 வரம் கருதித் தன்னை * வணங்காத வன்மை *
உரம் கருதி மூர்க்கத்தவனை ** - நரம் கலந்த
சிங்கமாய்க் கீண்ட * திருவன் அடி இணையே *
அங்கண்மா ஞாலத்து அமுது 84

2266 அமுது என்றும் தேன் என்றும் * ஆழியான் என்றும் *
அமுது அன்று கொண்டு உகந்தான் என்றும் ** - அமுதன்ன
சொல் மாலை ஏத்தித் * தொழுதேன் சொலப்பட்ட *
நன்மாலை ஏத்தி நவின்று 85

2267 நவின்று உரைத்த நாவலர்கள் * நாண்மலர் கொண்டு * ஆங்கே
பயின்றதனால் பெற்ற பயன் என் கொல்? ** - பயின்றார் தம்
மெய்த்தவத்தால் * காண்பரிய மேக மணிவண்ணனை * யான்
எத்தவத்தால் காண்பன் கொல் இன்று? 86

2268 இன்றா அறிகின்றேன் அல்லேன் * இருநிலத்தைச்

சென்று ஆங்கு அளந்த திருவடியை ** - அன்று
கருக்கோட்டியுள் கிடந்து * கை தொழுதேன் கண்டேன் *
திருக்கோட்டி எந்தை திறம் 87

2269 திறம்பிற்று இனி அறிந்தேன் * தென்னரங்கத்து எந்தை *
திறம்பா வழி சென்றார்க்கு அல்லால் ** - திறம்பாச்
செடி நரகை நீக்கித் * தாம் செல்வதன் முன் * வானோர்
கடி நகர வாசல் கதவு 88

2270 கதவிக் கதஞ்சிறந்த[16] * கஞ்சனை முன் காய்ந்து *
அதவிப் போர் யானை ஒசித்து ** - பதவியாய்ப்
பாணியால் நீர் ஏற்றுப் * பண்டொருகால் மாவலியை *
மாணியாய்க் கொண்டிலையே மண்? 89

2271 மண்ணுலகம் ஆளேனே? * வானவர்க்கும் வானவனாய் *
விண்ணுலகம் தன்னகத்து மேவேனே? ** - நண்ணித்
திருமாலைச் * செங்கண் நெடியானை * எங்கள்
பெருமானைக் கை தொழுத பின் 90

2272 பின்னால் அருநரகம் * சேராமல் பேதுறுவீர் *
முன்னால் வணங்க முயன்மினோ ** - பல்நூல்
அளந்தானைக் * கார்க்கடல்[17] சூழ் ஞாலத்தை * எல்லாம்
அளந்தான் அவன் சேவடி 91

2273 அடியால் முன் கஞ்சனைச் செற்று * அமரர் ஏத்தும்
படியான் * கொடி மேல் புள் கொண்டான் ** - நெடியான் தன்
நாமமே * ஏத்துமின்கள் ஏத்தினால் * தாம் வேண்டும்
காமமே காட்டும் கடிது 92

2274 கடிது கொடுநரகம் * பிற்காலும் செய்கை *
கொடிதென்று அது[18] கூடா முன்னம் ** - வடிசங்கம்
கொண்டானைக் * கூந்தல்வாய் கீண்டானை * கொங்கை நஞ்சு
உண்டானை ஏத்துமினோ உற்று 93

2275 உற்று வணங்கித் தொழுமின் * உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில்வண்ணன் ** - பற்றிப்
பொருந்தாதான் மார்பு இடந்து * பூம்பாடகத்துள்
இருந்தானை * ஏத்தும் என் நெஞ்சு 94

---

[16] கதஞ்சிறந்து
[17] அளந்தான் இக்கார்க்கடல்
[18] அவை

2276 என் நெஞ்சம் மேயான் * என் சென்னியான் * தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன் ** - முன்னம் சேய்
ஊழியான் * ஊழி பெயர்த்தான் * உலகேத்தும்
ஆழியான் அத்தியூரான் 95

2277 * அத்தியூரான் புள்ளை ஊர்வான் * அணிமணியின்
துத்தி சேர் * நாகத்தின் மேல் துயில்வான் ** - முத்தீ[19]
மறையாவான் * மாகடல் நஞ்சுண்டான் தனக்கும் *
இறையாவான் எங்கள் பிரான் 96

2278 எங்கள் பெருமான்! * இமையோர் தலைமகன்! நீ *
செங்கண் நெடுமால்! திருமார்பா! ** - பொங்கு
படமூக்கின் ஆயிரவாய்ப் * பாம்பணை மேல் சேர்ந்தாய் *
குடமூக்குக்[20] கோயிலாக் கொண்டு 97

2279 கொண்டு வளர்க்கக் * குழவியாய்த் தான் வளர்ந்தது *
உண்டது உலகேழும் உள்ளொடுங்க ** - கொண்டு
குடமாடிக் * கோவலனாய் மேவி * என் நெஞ்சம்
இடமாகக் கொண்ட இறை 98

2280 * இறை எம்பெருமான்! அருள் என்று * இமையோர்
முறை நின்று * மொய்ம்மலர்கள் தூவ ** - அறைகழல
சேவடியான் * செங்கண் நெடியான் * குறள் உருவாய்
மாவடியில்[21] மண் கொண்டான் மால் 99

2281 * மாலே! நெடியோனே! கண்ணனே! * விண்ணவர்க்கு
மேலா! * வியந்துழாய்க் கண்ணியனே! ** - மேலால்
விளவின் காய் * கன்றினால் வீழ்த்தவனே! * என்தன்
அளவன்றால் யானுடைய அன்பு 100

**தசக அடிவரவு:** அன்பு கடை தாம் பிரான் பொருள் மதி நின்றது
இடங்கை பகல் பின்னால் திரு

**பூதத்தாழ்வார் திருவடிகளே ஷரணம்**

[19] முத்தி
[20] குடமூக்கில்
[21] மாவலியை